விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 23 றம்ழான் 4 இதழ் 143

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-7-1981

## பொலிஸ் கான்ஸ்டபிள் வேலைநீக்கம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து கல்கிசை பொலிஸ் நிலையத்திற்குத் திடீர் இடமாற்றஞ்செய்யப் பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வா, வேலைநீக்கஞ்செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக நேரில் விபரம் அறிந்து கொள்ளும்பொருட்டு பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, கான்ஸ்டபிள் சில்வா ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டதைத் தொடர்ந்து இவர் உடனடியாக கல்கிசை பொலிஸ்நிலையத்துக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டார்.

இது சம்பந்தமாகப் பின்னர் நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து கான்ஸ்டபிள் சில்வா வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

இதே மாதிரியான நடவடிக்கை, வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பேர் மீதும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

[கொழும்பு]

பாராளுமன்றம் இன்றுகூடுகிறது. கட்சித் தலைவர்களின் கூட்டமும் இன்றுநடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [து]

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை கல்விவலய நிலையம்; க. பொ. த. [உயர்தர] வகுப்பு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான கருத்தரங்கை இன்றும் நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடத்துகிறது. [து]

### யாழ். வன்செயல்கள்

# "ஜனாதிபதி ஆணைக்குழுவை கூட்டணி ஏற்காது!

# சர்வதேச கமிஷனே விசாரிக்க வேண்டும்!"

## சென்னையில் 'அமிர்' விளக்கம்

சென்னை, ஜூலை 6

"யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாகவும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் நியமிக்கும்எந்த விசாரணைக்கமிஷனையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அரசாங்கம் நியமிக்கும் விசாரணைக் கமிஷனில் எமக்கு நம்பிக்கையில்லை."

இவ்வாறு இலங்கை எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் இன்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்ட திரு. அ. அமிர்தலிங்கம், இன்று சென்னை வந்துசேர்ந்தார்.

பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு அவர் விளக்கமாகப் பதிலளித்திருந்தார்.

### இந்திரா ஆதரவு

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்த கருத்து பற்றி நிருபர் ஒருவர் கேட்ட போது;

"யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் துயர் துடைக்க சாத்தியமான சகல உதவிகளும் அளிக்கப்படும் என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி உறுதிமொழி அளித்திருக்கின்றார். நாம் இதனைப் பெரிதும் வரவேற்பதுடன் மனிதாபிமான தொரு விஷயத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நீட்டியிருக்கும் நேசக்கரத்துக்காக நன்றி கூறுகின்றோம்" என்று பதிலளித்தார்.

### விசாரணைக் கமிஷன்

"யாழ்ப்பாண வன்செயல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணை கமிஷன் நியமிப்பதாக அறிவித்துள்ளதே இதனை ஏற்றுக் கொள்வீர்களா?" என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, 'இல்லை' என்று பதிலளித்த திரு. அமிர்தலிங்கம்;

"அரசு நியமிக்கும் விசாரணைக் கமிஷனை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அரசு நியமிக்கும் எந்த விசாரணை கமிஷனிலும் நமக்கு நம்பிக்கை இல்லை" என்று விளக்கமளித்தார்.

[6-ம்பக்கம் பார்க்க]

**அரிய சந்தர்ப்பம்**

Diploma in Hotel Management பயிற்சி வகுப்பு - மீண்டும் ஒரு புதிய வகுப்பு 13-7-81ல் ஆரம்பமாகிறது. O/L அல்லது N C G E படித்த இருபாலாரும் சேரலாம். பயிற்சிக்காலம் மூனறு மாதம். விபரங்களுக்கு 10-7-81 முன்பாக நேரில் வரவும்.

NATIONAL ACADEMY

[அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது]

Momsac Building

11, Stanley Road, Jaffna. 0240

## யாழ். வருவதில் தயக்கம்?

[யாழ்ப்பாணம்]

தென்பகுதியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்ட 35 தமிழ்ப் பொலீசாரில், சிலர் மட்டுமே யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்ட தென்பகுதித் தமிழ்ப் பொலிசாரில் பலர் இங்கு வருவதில் தயக்கம் காட்டுவதாத்தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, நெஞ்சு கொதிக்கும் சம்பவங்களை, அநேக போட்டோப் படங்களுடன் முழு விபரமாகத் தருகிறது

| வரதர் வெளியீடு | அளிக்கும்

**யாழ்ப்பாணம் எரிகிறது**

'24 மணிநேரம்' "நீலவண்ணன்" எழுதியது

இப்போது விற்பனையாகிறது

ரூபா 8/- (தபாலில் பெற ரூ. 10-50 அனுப்புக)

ஆனந்தா புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (0197)

## நிலத்துக்கடியிலிருந்து ரூ.30,000 நகைகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

நகைத்தொழிற்சாலையில் களவுபோன முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், அதே நகைத்தொழிற்சாலையில், நிலத்துக்கு அடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன்; ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியில், சோமநாதன் சிவனேசன் என்பவருக்குச் சொந்தமான நகைத் தொழிற்சாலையில் 30,000 ரூபா பெறுமதியான நகைகளும் 20,000 ரூபா ரொக்கப்பணமும் அண்மையில் திருடப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக யாழ். பொலிஸ்நிலையத்தில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து யாழ். பொலிஸ் நிலையப் பதில் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சி. யோககுமாரன் தலைமையில் சென்ற பொலிசார், குறிப்பிட்ட நகைத்தொழிற்சாலையில் வேலைசெய்த கருவாஞ்சிக்குடி

[6ம் பக்கம் பார்க்க]

| | | |
|---|---|---|
| லோ லெவல் சூட்ஸ் (Low Level Suites Twyfords Complete Set) | 2400/- | |
| கம்பிகள் (சகல அளவுகளிலும்) | 500/- தொடக்கம் 520/- வரை | |
| பட்டங்கள் | | |
| கோண இரும்புகள் | | |
| 1¼ x 1¼ x 1/8 | — 135/- | 20 அடி இரும்பு |
| 2'' x 2'' x ¼ | — 577/50 | 50 kgs. |
| முள்ளுக்கம்பி (2 Rolls) மொத்தவிலை | 670/- | 50 kgs. |
| சில்லறைவிலை | 690/- | 50 kgs. |
| 'எஸ்' லோன் பைப்புகள் ½'' | — 6/70 | மீற்றர் |
| ¾'' | — 9/90 | மீற்றர் |
| 1'' | — 14/60 | மீற்றர் |
| நெல் உடைக்கும் இயந்திரம் (Chinese) | 21,500/- | |
| அரிசி தீட்டும் இயந்திரம் (Chinese) | 19,500/- | |
| கம்பி ஆணி 14 wg. | 745/- | 50 kgs. |
| மற்றைய அளவுகளில் | 715/- | 50 kgs. |

மேலும் உங்களுக்குத் தேவையான சகல இரும்புப் பொருட்களுக்கும் கட்டடப் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

**மஸ்கன்ஸ் லிமிட்டெட்**

35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 8221

0235

மணிவாக்கு

அநீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதி செய்வதுதான் இன்னும் அவமானகரமானது.
— பிளேட்டோ.

# நமது நோக்கு

## தேசிய அபிவிருத்தியும் நாசகார சக்திகளும்

வாழ்வின் மத்தியில் அழிவு கூடி கொள்வதுஆண்டவனின் நியதிபோலும்.

சத்தியத்தின் மத்தியில் பொய்மை பலமடைவது போல் தோன்றுவதும் இதே மாதிரி.

இந்த அடிப்படைத் தத்துவத்துக்கமைய நாட்டின் ஜனாதிபதி மக்களுக்கு அளித்த அறைகூவல் எமது கவனத்துக்குரியது.

ஆட்சிக்கால எல்லைவரைக்கும் - 1983ம் ஆண்டு - இந்த அரசாங்கம் தேசிய அபிவிருத்தியில் தொடர்ந்து சேவை புரியும் என்றும்; இவ்வித அபிவிருத்திச் சேவையை இந்த அரசாங்கத்தினால் மட்டுமே வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய முடியுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

எதிர்மறை நோக்கில் நாட்டில் தலைதூக்கும் நாசகார சக்திகள் எவையும் இதற்குத் தடையாகவிருக்க முடியாது. அவற்றையெல்லாம் முறியடிக்க கட்சி வேறுபாடுகளை ஒழித்து மக்கள் ஒன்றுபட வேண்டுமென்றும் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறார், ஜனாதிபதி ஜயவர்த்தனா.

நாட்டின் ஒரு முக்கிய இனமான தமிழ்மக்களின் இன்றைய நிலை, சிறப்பாக வடபகுதி மக்களின் அவல நிலை எவ்வளவோ இருந்தும் ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கையை நாம் அலட்சியம் செய்வது அரசியல் விவேகமாகாது; தேசிய தர்மமாகாது கூட.

அரசியல்கட்சி ரீதியில் ஜனாதிபதி அவர்களின் வேண்டுகோளைக் கணிப்பது எதிர்க்கட்சிகளுக்கு இயல்பானகாரியம்; எனவே அந்த நோக்கைத் தற்காலிகமாகக் கைவிடும்படி கேட்கத் துணிகிறோம்.

அதேவேளையில் கட்சி வேறுபாடுகளை ஒழிக்காவிட்டாலும் மறக்கவைப்பதில் அரசாங்கம் உதவ முன்வரவேண்டுமென்பதை நாம் திடமாக வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

கட்சி வேறுபாடுகளை ஒழிய ஆக்கபூர்வமான வேலைகள் தொடர, நாசகார சக்திகள் முறியடிக்கப்பட வேண்டும்; அதற்கும் அரசாங்கத்தின் அதிகாரமே - சட்டம் கட்டுப்பட்ட - அதிகாரமே இன்றியமையாதது.

நாசகார சக்திகள் யாவை? இந்தக் கேள்வியே இன்று ஒரு தேசிய பிரச்னையாக எழுந்துள்ளது; விவாதத்துக்குரியது; ஆயினும் பகரப்படைமற்ற ஆராய்வின் விடைதரவல்லது.

இன்று வடபகுதியில் நிகழ்ந்த பேரழிவுச் சம்பவங்கள் பற்றி ஜனாதிபதி பெருங்கவலை கொண்டிருப்பது சொல்லாமலே எவருக்கும் புரியும். ஆனால் பகிரங்கமாக அதுவும் உத்தியோக தோரணையில் சிங்கள மக்கள் முன்னிலையில் அவர் முன்வைக்கும் கருத்து தமிழ் மக்களுக்கு வேதனை அளிப்பது தெளிவு.

வடபகுதியில் வலுப்பெற்றிருக்கும் பயங்கரவாதமே அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண வன்செயல்களுக்குக் காரணம். நாட்டைப் பிரிக்கும் இயக்கம் ஒன்று அரசுக்கெதிராகப் பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருக்கிறதென்று அடிக்கடி சொல்லப்படுவதை சிங்கள மக்கள் நம்பிவிடுவது இயற்கை.

இதுவிடயமாக நாம் எமது சொந்தக் கருத்தைக் குறிப்பிடுவது பொருத்தமற்றது. பொறுமையுடன் தொழிற்படுவது விரும்பத்தக்கது.

இந்த நாட்டில் நடுநிலைமை கடைப்பிடிக்கும் தேசியத் தலைவர்கள், ஸ்தாபனங்கள் சிங்களப் பெருமக்கள் மத்தியில் இல்லையா?

ஆம். உண்டு! ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் இலங்கையில் உண்டு. அதன் தலைவர் அமைச்சர் ஆவர் லட்ஷ்மன் விக்ரமசிங்கி, நாட்டின் பல்வேறு சமூகத்தினரின் பெருமதிப்பு பெற்றவர்; அதுமட்டுமல்ல இன்றைய அரசியல் கேடுகளைத் தீர்த்துவைக்க ஆற்றலும் புத்திசித்தமுடைய தலைவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களே என்றும் கருதுபவர்.

யாழ்ப்பாணத்தின் நிலைமையை நேரில் கண்டு துயருற்ற இப்பெருமகன் வெளியிட்ட கருத்து ஒன்றை நாம் வற்புறுத்துவதால் பயன் கிடைக்குமென்று நம்புகிறோம்.

"பயங்கரவாதம் எதற்கும் பதில் பயங்கரவாதம் பரிகாரமாகாது. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பழிவாங்கும் வன்செயல்கள் எவற்றையும் ஒரு நீதியான அரசு, நாகரிகமான சமூகம் மன்னிக்கமாட்டாது; இதனால் யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்ட சேதம் - சொத்திலும் உள்ளத்திலும் - நான் நேரில் கண்ட துன்பக்காட்சிகள் என் குழுவுக்கு பெரும் வெட்கத்தை அளித்தது".

ஜனாதிபதி ஜயவர்த்தனா அவர்களுக்கு இவ்வாறு முறையிட்ட சிங்களப் பெருமகன், ஆயர் லட்ஷ்மன் விக்கிரமசிங்கி போன்ற பெரியோர் முன்னும் பல உண்டானால், ஜனாதிபதி ஜயவர்த்தன நாட்டின் நாசகார சக்திகளை இனங்கண்டு அவற்றை ஒழிப்பதற்கும் நாட்டை அபிவிருத்தியில் முன்னேற்றுவதற்கும் முடியும்.

## நாளை கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

ஈழத்து சின்னக்கதிர்காமம் எனப்போற்றப்படும், காரைநகர் அரசடிக்காடு கதிர்காம வேலாயுத சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் நடைபெறவிருக்கிறது. [ம]

## உற்சவம்

(சங்கானை)

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவங்கள் இன்று செவ்வாய் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து அலங்காரத் திருவிழாக்கள் இடம்பெறும். 10ம் திருவிழா அன்று அம்பாள் வீதிவலம்வந்து உற்சவங்கள் பூர்த்தியாகும். [ ]

# யாழ். நூலகத்துக்கு உதவ

## பிரஜைகள் கமிட்டி நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடந்த வன்செயலால் தீக்கிரையான யாழ். பொதுசன நூல் நிலையத்தை கட்டி எழுப்புவதற்கும், நிதிவழங்குவதற்குமான நடவடிக்கையை, தேசிய சௌஜன்யத்துக்கான பிரஜைகள் கமிட்டி மேற்கொண்டுள்ளது.

சேர் செனரத் குணவர்த்தன தலைமையிலான இக்கமிட்டியில் வணபிதா என். ரத்தினராஜா, வணபிதா திஸ்ஸ பலசூரியா ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், கடமையாற்றுகின்றனர். இக்கமிட்டியின் கூட்டத்தில் யாழ். பொது நூல்நிலையம் தீக்கிரையான சம்பவம்பற்றி ஆராயப்பட்டு, நூல்நிலையத்தைத் திரும்பவும் கட்டுவதற்கு நிதிசேர்ப்பதென்று தீர்மானிக்கப்பட்டதுடன், இதற்கென ஒருகமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

நாடுபூராவும் பொதுமக்களிடமிருந்து தலைக்கு 50சதம் என்ற ரீதியில் ஒரு பட்டியலிலும், பெருந்தொகையான பணத்தை மற்றொரு பட்டியலிலும் திரட்டுவதென முடிவாகியது.

விலைமதிக்க முடியாத நூலகத்தின் பெறுமதியான நூல்கள் யாவும் எரிந்துசாம்பலாகிவிட்டதாகவும், கூடியளவு உதவி வழங்கி, நல்லெண்ணத்தின் மூலம் நூலகத்தை புனரமைப்புச்செய்ய உதவவேண்டும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய சௌஜன்யத்திற்கான பிரஜைகள் கமிட்டி, யாழ். நூல் நிலையத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவிகள் வழங்குமாறு நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்கள் நிதி அனுப்பும்போது இணைப்பொருளாளர் எம். எம். மொகிதீன், 61, இசிப்பத்தான மாவத்தை, கொழும்பு-5 என்ற விலாசத்திற்கு காசோலை தபால் கட்டளை, காசுக்கட்டளைகளை அனுப்புமாறும் நூல்களை அன்பளிப்பு வழங்கவிரும்புவோர், நூல்களின் பட்டியலை, தேசிய சௌஜன்ய பிரஜைகள் கமிட்டி, 281, டீன்ஸ் றோட், கொழும்பு-10 என்ற விலாசத்திற்கு அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஏ)

# மேற்குலண்டனில்

## 3-வது நாளாக கலவரம் 120 பொலிசார் காயம்

லண்டன், ஜூலை 6

மேற்கு லண்டனில் நேற்று மூன்றாவது நாளாக இடம்பெற்ற கலவரங்களின்போது பல கடைகள், வீடுகள் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதாகவும் வீதிகளில் தடைகளைப் போட்ட கலகக்காரர்கள், பொலிஸ்காரர்களை போத்தல்களினாலும் கற்களினாலும் தாக்கியதாகவும் அறிவிக்கப்பட்டது.

'மொட்டைத் தலையர்கள்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் இளைஞர்களே இக்கலவரங்களில் ஈடுபட்டனர் என்றும் சவுத்தோலில் வாழும் ஆசியமக்கள் மீது காடைத்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### 120 பொலிஸார் காயம்

லிவர்பூர் பகுதியில் நடைபெற்ற இக்கலவரங்களில் இதுவரை 120 பொலிஸார் உட்பட 300 பேர்வரை காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற கலவரத்தில் மட்டும் 70 பொலிஸார் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் இக்கலவரங்கள் தொடர்பாக லண்டனில் கைதுசெய்யப்பட்ட 24 இளைஞர்களும் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ)

# மக்கள் கருத்து

## பல்லாண்டு வாழ்க

பல்லாண்டு காலமாக யாழ். நகரிலிருந்து ஈழநாடு முழுவதும் பிரபல்யமாகி வரும் "ஈழநாடு" தினசரியின் வளர்ச்சியும் பெருமையும் போற்றத்தகு மேன்மையுடைத்தாகும்.

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் அழிந்துவிடுமோ எனப் பலரும் ஏங்கியிருந்த போதும் எமது மனக்குறையை நிவர்த்திசெய்துவிட்டது "ஈழநாடு". அதன் தனி ஒரு தனித்துவத்தையும் பத்திரிகா தர்மத்தையும் பேணிக்காக்கும் "ஈழநாடு" தமிழறிந்த வாசகர்களின் பெருநோக்கத்தை ஈடுசெய்வதில்பெருமையில்லாமலில்லை.

நாம் எந்தவகையில் விமர்சனமாகவும் உண்மையாகவும் செய்திகளை எதிர்பார்க்கின்றோமோ அந்த வகையில் எமக்களித்துவரும் அதன் புகழ் வாழ்க.

'ஈழநாடு' ஆசிரியத்தலையங்கம் 'நமது நோக்கு' விடயங்களை போலவே அறிவு வளர்க்க விரும்பும் அத்தனை பேருக்கும் அமிர்தமாக இருப்பது உண்மையில் போற்றுதற்குரியது. ... பள்ளிக்கூடம் ஆவரங்கால்.

சர்வகலாசாலை பேராசிரியர்கள் பலவேறு துறைகளையும் படித்ததுபோன்ற அறிவுக் களஞ்சியமாகி மனநிறைவடையச் செய்கிறது.

'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பதுபோல என் அபிமானத் தினசரியாம் "ஈழநாடு" சுடச் சுட மேலும் மிளிரும் பொன்போல தூய்மையும் மதிப்பும் பெற்றுப் பெருகி பல்லாண்டு வாழ இறைவனை வணங்குகின்றேன்.

கோபி

## புயலுக்கு 200 பேர் பலி!

மணிலா, ஜூலை 6

பிலிப்பைன்சில் நேற்று வீசிய கடும்புயலுக்கு 200 பேர் பலியாகினர் என்றும் 4 ஆயிரம் பேர்வரை வீடிழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளனர். (இ)

## பாலமுரளி - ஆஸ்தான வித்துவான்

ஹைதராபாத், ஜூலை 6

சங்கீதவித்துவன் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா ஆந்திரா மாநில ஆஸ்தானவித்துவானாக நியமிக்கப்பட்டுள்ளது. [ர]

# நாடும் நடப்பும்

மேற்கு ஜெர்மனிக்கு 'கள்ளுப்பட்டுச்' சென்றவர்களில் சிலர் கிழக்கு ஜெர்மனியிலிருந்தே திரும்பிவந்து கொண்டிருக்கிறார்களாம். இங்கிருந்து மேற்கு ஜெர்மன் சென்ற ஓர் இளைஞர் ஒரு வாரத்துக்குள் திரும்பிவந்து சேர்ந்திருக்கிறார். ஏன் திரும்பி வந்தார்?

ஜெர்மன் செல்வதற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பவர்களும் விமான டிக்கட் எடுத்துவிட்டு பாஸ்போட் எடுப்பதற்காக ஏஜென்சிகளிடம் பணம் கொடுத்துவிட்டுக் காத்திருப்பவர்களும், நகைநட்டுக்களை விற்றும் காணியை ஈடுவைத்தும் மகனை கொழும்புக்குப் போய் வழி அனுப்பி வைத்துவந்த பெற்றோர்களும் சுவரிலடித்த பந்துபோல் போனவுடன் திரும்பிவந்திருக்கும் அந்த இளைஞர் திரும்பிய காரணத்தை அறிவதற்கு அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவரும் சளைக்காமல் பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு நின்றார்.

கிழக்கு ஜெர்மனியில் பொலிசார் தங்களைக் கைது செய்து ஒரு சுரங்கத்தில் வைத்ததாகவும் தாம் செஞ்சிலுவை முடி வந்து சேர்ந்துவிட்டதாகவும் மற்றும் பலர் அங்கு இன்னமும் இருப்பதாகவும் அவர்கள் தங்கள் பெற்றோருக்கு அவசரமாக எழுதிக் கொடுத்த கடிதங்களைத் தாம் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துக் கொண்டு நின்றார். தாம் அணிந்திருந்த உடுப்புடனேயே திரும்பியதாகவும் தமது 'சூட்கேஸ்' பின்னர் இலங்கை வந்துசேருமென்று கிழக்கு பேர்லின் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் தாம் கொண்டுசென்ற பணத்துடன் வேறு சிலரிடமும் பணம் சேகரித்தே தாம் திரும்பிவந்ததாகவும் அந்த இளைஞர் கூறிக் கொண்டிருக்கிறார்.

போனவுடன் திரும்பிவந்தவர்கள் ஏதாவது காரணம் சொல்லத்தான் வேண்டும். உண்மையான காரணத்தை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது சரியல்ல! கஷ்டப்பட்டுப் பெற்றோர் பொருளை ஈடுவைத்தும் வட்டிக்கு வாங்கியும் பிள்ளையின் பிடிவாதத்தைத் தாங்க முடியாமல் வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்க அந்தப் பிள்ளை உடனேயே வெறுங்கையுடன் திரும்பிவந்து வீட்டு வாசலில் நின்றால் பெற்றோருக்கு எப்படியிருக்கும்? பெற்றோரைத் திருப்திப்படுத்துவதற்காகவாவது ஏதாவது சொல்லித்தானே வேண்டும்!

சில மாதங்களுக்கு முன்னரும் ஓர் இளைஞர் ஜெர்மன் புறப்பட்டுச் சென்ற சில தினங்களிலேயே கொழும்பு திரும்பி உறவினர் வீட்டுக்குப் போனார். அவரை வழியனுப்பி வைத்தவர்களுக்கு அதிர்ச்சி! அந்த இளைஞர் சொன்ன காரணம் 'மாஸ்கோ செல்லும் வழியில் விமானத்தில் கோளாறு ஏற்பட்டுவிட்டது, கொழும்புக்குத் திரும்பி வந்துவிட்டது. பழுதுபார்த்தபின் மீண்டும் செல்லும்."

தம்பி சில தினங்களாகக் கொழும்பிலேயே தங்கியிருந்தான். விமானத்தில் கோளாறு ஏற்படவில்லை. அவருக்குத்தான் ஏதோ கோளாறு என்று புரிந்து கொள்ள முடிந்தது. ஜெர்மன் போனா நஷ்டம் போகட்டும் தம்பியை தகப்பன் வீட்டுக்கு அழைத்துவந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## வட்டூர் வீரபத்திரர் சிவன் தேர் உற்சவ சிறப்பு மலர்



அமரர் இராஜவைத்தியர் அ. க. குமாரசுவாமி அவர்கள்

# அண்டினோர்க்கு அபயமளிக்கும் வட்டூர் வீரபத்திரர் சிவபெருமான் இன்று சித்திரத்தேர் பவனி



வைத்திய கலாநிதி தர்மகர்த்தா அ. க. காசிப்பிள்ளை அவர்கள்

''சீர் பூத்த வட்டுநகர் தன்னில் வாழும்
சிவம் பூத்த கொல்லைப் பதியில்
ஏர் பூத்த உக்கிரனார் தன்னையேத்தி
இசை பூத்த செந்தமிழால் ஊஞ்சலாத
ஆர் பூத்த சடைமௌலி அரனார் ஈன்ற
அருள் பூத்த ஆகுலன் மேலமர்ந்த முக்கண்
கார் பூத்த கலி முகவன் தனது பாதம்
கரம் பூத்த மலர் கொண்டே களுதி வாழ்வம்''

ஈழத்திருநாட்டின் வடபால் இயற்கையன்னை எழில்கொழிக்கும் யாழ். நகரின் கிழக்கோரமாக ஏழு கல் தொலைவில் வட்டூர் என்னும் சிறப்புப்பதியில் அருள் பாலிக்கத்தோன்றினார் வீரபத்திரர் சிவன். மூர்த்தி, தலம், தீர்த்தம் என் பவற்றுடு பெருமைபெற்ற தலமாகக் காட்சிதந்துகொண்டிருப்பது வட்டூர் தேவஸ்தானமாகும்.

15ம் நூற்றாண்டளவில் நல்லூர் இராசதானியைச்சேர்ந்த தெய்வேந்திரமுதலியின் வழித்தோன்றலில் வந்த வீரமாகாளர் அவர்களால் வீரபத்திரர் சிவன் ஆலயம் அமைக்கப்பட்டது. சங்கிலிமன்னன் காலத்தில் சைவத்தையும், தமிழையும், இறைபக்தியையும் மக்களிடையே வேரூன்ற வைக்கும் நோக்கமாகத் தனது ஆட்சிக்குட்பட்ட கிராமங்களதோறும் வீரபத்திரர் ஆலயங்களைப் பிரதிட்டை செய்து இறைபக்தியைப் பெருக்கினார். அம்மரபில் வந்துதித்த வைத்திய மேதை அப்பா அவர்கள் இத்தேவஸ்தானத்தைச் சிவாலயமாக மாற்ற இறையருள் கைகூடியது. இவரது வழித்தோன்றல்களான வைத்திய சிரோன்மணி கந்தையா அவர்களும், அவர்களது அருந்தவப்புத்திரர்களான காலஞ்சென்ற இராஜ வைத்தியர் க. குமாரசுவாமி அவர்களும் அவரைத்தொடர்ந்து வைத்திய கலாநிதி க. காசிப்பிள்ளை அவர்களும் இத்தேவஸ்தானத்தின் நித்திய நைமித்திய கருமங்களைச்செவ்வனே செய்து மக்களது நன்மதிப்பைப் பெற்றுவந்துள்ளனர். எவ்வளவு துன்பங்கள் சூழ்ந்தாலும் பெருமானாரின் திருப்பணிவேலைகளைக் கவனிப்பதில் இவர்கள் பின்னிற்கவில்லை,

வைத்திய கலாநிதி காசிப்பிள்ளை அவர்களது வழித்தோன்றலான ஏகபுத்திரன் சுமந்திரன் மரபு வழுவாது ஆலயத்தைப் பரிபாலிக்கவந்து கொண்டிருப்பது பெருமைக்குரியதாகும்.

### காசியிலிருந்து வந்த லிங்கம்

இச்சிவாலயத்திற்குக் காசியிலிருந்துவிசேடமாகக்கொண்டு வந்த வாணலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதற்காகவைத்திய சிரோன்மணி அப்பா அவர்கள் பெருமுயற்சி எடுத்தார்.

வீரபத்திரப் பெருமானாரின் அனுக்கிரகத்தினால் பஞ்சலிங்கங்களின் ஒன்றான வாயுலிங்கமெனக் கருதப்படும் மகிமைகளும் சக்தியும் பொருந்திய அதியுத்தம குணங்களிலுள்ள வாணலிங்கத்தை 1903ம் ஆண்டு பிரதிஷ்டைசெய்தார்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தில் கண்ணப்பநாயனார் தமது கண்ணைப் பறித்தப்பிய சுவடு இன்னும் காணக்கூடியவாறு அமைந்திருப்பதெனக் கூறப்படுகின்றது. மேலும், இவ் லிங்கத்தின் சிறப்பியல்புகளில் ஒளிவீசும்தன்மை,நிறைகூடிக்குறையும் அருள் சுரக்கும் விந்தைதான் என்னே!

### உற்சவ மூர்த்திகள்

சிவாகம விதிக்கமையப் பெற்ற இத்தேவஸ்தானத்தின் பிரகாரத்தில் பள்ளி கொள்ளும் விஷ்ணு, கணபதி, வீரபத்திரர், சனீஸ்வரர், நவக்கிரகங்கள், வயிரவர், முருகன், பஞ்சலிங்கம் முதலிய கடவுள்களுக்குத்தனித்தனியேகோவில்கள் அமைந்துச் சிறப்புப் பெற்றது இத்தலமாகும். உற்சவ மூர்த்திகளின் திருவுருவங்கள் கலையார்வம் பொருந்தியதாகக் காட்சியளிப்பதோடு, தில்லைக்கூத்தன் சிதம்பர நடராசனின் திருவுருவம் சோழர் காலத்துக் கலையுலக வரலாற்றை நினைவுபடுத்தக்கூடியவாறு மிகச்சிறப்பாக அமைந்துள்ளது.

தில்லைக்கூத்தன் அருள் சுரக்கும் ஆனி உத்தரத் தரிசனத்தன்று எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் அற்புதக் காட்சியைப் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி மங்களஇசையும் வாழ்த்தொலியும் எதிரிப்போற்றி வந்திக்கும்காட்சியை எவருமே மறந்துவிட மாட்டார்கள்.

### ஆலயச் சிறப்பு

இத்தேவஸ்தானம் கொள்ளோலைப் பதியெனும் வரலாற்றுமிக்க இடத்திலேயே அமைந்துள்ளது. இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யுமுன்னர் கிராமத்தில் வாழ்ந்து பிணிகண்ட மக்கள் பெரும் துன்பமுற்றனர். மக்களது துன்பங்கள் பறந்து சுபீட்ச வாழ்வு வாழ வைத்திய சிரோன்மணி அப்பா அவர்கள் திருப்பணியை ஆரம்பித்துவைத்தார்.

தொகுப்பு:
**— வட்டூரான் —**

இலங்கைத் தீவின் எப்பாகத்திலும் தீராத மனநோயினால் பீடிக்கப்பட்டோர் ஆலய தர்மகர்த்தா குமாரசுவாமி அவர்களையடைந்து வேண்டிய சிகிச்சை பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்துவருவதை இன்றும் காணக்கூடியவாறுள்ளது.

அண்டினோர்க்கு அபயமளிக்கும் வட்டூர் வீரபத்திரர் சிவன் அருளாலேயே தங்களது வைத்தியம் சிறப்புப் பெற்றதோடல்லாமல் சித்தியும் கிடைத்துவருவது மகிமைதான் என்னே என்று தில்லைக்கூத்தனை வாயார வைத்திய கலாநிதி காசிப்பிள்ளை அவர்கள்போற்றுவதைக் கேட்கலாம்.

ஆனி உற்சவத்தின்போது வட்டூர் இந்திரலோகம்போல் காட்சியளிக்கும். தேவஸ்தானத்தில் அலங்காரக்காட்சி எல்லோரையும் மெய்மறக்கச் செய்யும். வட்டூர் மக்கள் திரிகரண சுத்தியுடன் விரதமிருந்து அனுக்கிரகங்களைப் பெறத்துடிக்கும் பயபக்தி என்றும் போற்றற்குரியதாகும்.


ஆனி உத்தர தீர்த்தோற்சவ நாளில் நடேசர் அபிஷேகம் தனிச்சிறப்புப் பெற்றது. தில்லைக்கூத்தன் தன்னைப்போலவே தனது அடியார்களையும் நடனமாடவைத்து அருள்பாலித்தருளுவது மறக்கமுடியாத சம்பவமாகும். தில்லை மூதூரில் ஆடித்திருக்கோலம் இதுவென வியக்கத்தக்க அளவுக்கு அமைந்துள்ளது.



அமரர் இராஜவைத்தியர் அ. க. குமாரசுவாமி அவர்களின் தேர்த்திருப்பணியை, வட்டூர் மக்களும் தேர்த்திருப்பணிச் சபையும் ஆலய தர்மகர்த்தா அ. க. காசிப்பிள்ளை அவர்களும் எடுத்த முயற்சியினால் திருவருள் கைகூடி நிறைவெய்திய வட்டூர் சிவனின் சித்திரத் தேரின் வெள்ளோட்டவிழாக்காட்சி.

வட்டூர் வாழ் மக்கள் கடந்த 50 வருடங்களுக்கு மேல் வருடாந்த ஆனி உத்தர மகோற்சவத்தைப் பத்துத் திருவிழாக்களாகத் தம் தம் சந்ததி ரீதியாக வட்டூர் பெருமானுக்கு விழா எடுத்துவருவது ஆலய வரலாற்றில் சிறப்பம்சமாக மிளிர்வது மகிழ்ச்சிக்குரிய செயல்திறனாகும்.

[5-ம் பக்கம் பார்க்க]



தில்லைக் கூத்தனின் ஆனி உத்தரத் தரிசனக் காட்சி

[இறக்குமதி செய்யப்பட்ட சகலவிதமான] மீன்பிடி வலைகள், உபகரணங்கள் யாவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.]

நித்தியா ஸ்ரோர்ஸ்
9, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

மலிவு விலையில் மீன்பிடி வலைகள் உபகரணங்கள் எம்மிடம்] பெற்றுக்கொள்ளலாம்.

ராஜா ஸ்ரோர்ஸ்
36, முனீஸ்வரன் வீதி
யாழ்ப்பாணம்.

இயந்திர சாதன உற்பத்தி செய்வதோடு பராமரிப்பும் செய்துவருகின்றோம்

புறமோட்டேர்ஸ்
என்ஜினியரிங் கொம்பனி
844 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

# உணர்வுகள் எரிவதில்லை! [5]

'பேனு' எழுதுவது

இலங்கையின் பத்திரிகை உலக வளர்ச்சி பற்றி விரிவாக எடுத்துக்கூறியிருந்த திரு. ஹூ ஆகல்ல 'ஈழநாடு' இந்த சஞ்சிகைகள், தினசரி பத்திரிகைகள் ஆகியவற்றின் நல்ல வாரிசு எனலாம். இது பெரும் சக்தி படைத்ததாக இயங்கவேண்டும். இதன் நோக்கம் சமூக சௌஜன்யத்துக்காக உழைப்பது, பொருளாதாரவிடுதலைக்குஉழைப்பது சர்வதேச சமாதானம், முன்னேற்றம், ஆகியவற்றுக்கு உழைப்பது அதன் சுதந்திர நிலையும் நல்ல நிர்வாகமும் எதிர்கால வெற்றிக்கு நல்ல அத்தாட்சிகள். என்று தமது கட்டுரையை முடித்திருந்தார்.

எமது பத்திரிகைப்பணியை மீண்டும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இப்பெரியார்

களின் மேற்குறித்த கருத்துக்கள் ஆக்கமும் ஊக்கமும் தருவனவாக மாத்திரமின்றி எம்மை சரியான பாதையில் இட்டுச் செல்லும் சாதனமாகவும் அமைந்துள்ளன.

திரிகை தனது சேவையைச் செய்து வந்துள்ளது. ஆசிரியர் தலையங்கங்களில் இது அடிக்கடி வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஒரு கட்சியைச்சாராமல் - குறிப்பிட்ட ஒருசாரார் பக்கம் சாயாமல் பொதுமக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பணி தொடரப்பட்டு வந்துள்ளது. இவை 'ஈழநாடு' பத்திரிகையின் சிறப்பு அம்சங்கள் எனக் கூறலாம்.

தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவைப் பலப்படுத்த இப்பத்திரிகை பெருமளவு துணை புரிந்து வந்துள்ளது, இங்கு குறிப்பிடத்தக்கது.

'ஈழநாடு' பத்திரிகை ஆரம்பித்தது இலங்கைப் பத்திரிகைத்துறையின் சரித்திரத்தில் ஒரு துணிச்சல் மிக்கதும் வெற்றிகரமானதுமான ஒரு பரிட்சை. கொழும்புத் தலைநகருக்கு வெளியே தேசிய மொழி ஒன்றில் இயங்கும் ஒரே தினசரிப் பத்திரிகை இதுவே.

தேச மக்கள் நல்வாழ்வுக்குப் பெரிதும் உதவும் பிரிட்டனிலுள்ள பிரபல்யம் வாய்ந்த 'யோக்ஷயர் போஸ்ட்' போன்ற உயர்ந்த தரமுள்ள மாகாணப் பத்திரிகைகளை எமக்கு 'ஈழநாடு' நினைவூட்டுகிறது.

'ஈழநாடு' பத்திரிகை நாட்டு மக்களுக்கு மேலும் தொடர்ந்து பரந்த அளவில் சிறந்த

## தவறு

நேற்றைய இதழில் வெளியான இக்கட்டுரையில் பிஷப் குலேந்திரன் என்பது பிலிப் குலேந்திரன் என்று தவறாக அச்சாகியிருப்பதற்காக வருந்துகிறோம். டெய்லி நியூஸ் என்பதும் டெல்லி நியூஸ் எனத் தவறாகப் பிரசுரமாகியுள்ளது.

# "நிதானத்துடன் ஒருபக்கம் சாராத சேவை"

'ஈழநாடு' பத்தாவது ஆண்டுமலரில் பெரியார் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டிருந்த கருத்தும் எமது சிந்தனைக்குரியதே. அதில் வாசகர்களுக்கு ஒருசில பகுதியை மாத்திரம் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாய் இருக்கும் என்று கருதுகிறேன். அதுவருமாறு:-

'ஈழநாடு' இலங்கைக்கும் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் மிகவும் உயர்ந்த சேவை செய்து வந்துள்ளது. நடுநிலைமைக் கொள்கையை அனுசரித்து ஒருபக்கம் சாராது மிகவும் நிதானத்துடன் இப்பத் சேவையைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக." என்று அவர் எழுதியிருந்தார்.

இலங்கை பத்திரிகைத்துறையில் 'ஈழநாடு' ஒரு துணிச்சல் மிக்க பரீட்சை என்று திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனத்துக்குரியது.

இந்தப்பரீட்சையில் ஈழநாடு வெற்றி பெற்றுவிட்டதா இல்லையா என்பது இனிவரும் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

[நாளை தொடரும்]

# இந்திரா இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

புதுடில்லி ஜூலை 6

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் புதுடில்லி இல்லத்திற்கு முன்னால் சுமார் ஆயிரம் கட்டிடத்தொழிலாளர்கள் சம்பள உயர்வுகோரி இன்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்பிரயோகம் செய்த போது அவர்கள் கற்களை வீசினார்கள்.

இக்கட்டிடத்தொழிலாளர்களை இந்திராகாந்தி நாளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளாரென அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். [வெ]

## வெள்ளிவிழா

[யாழ்ப்பாணம்]

"ஈழநாடு" ஆரம்பகால விற்பனையாளர்களான திரு. கே. வி. தம்புவினால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவரும் யாழ். முனிஸ்வர கபே தனது 50 ஆண்டு வெள்ளிவிழாவை நாளை புதன்கிழமை காலை கொண்டாடுகிறது.

## நிலத்துக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யைச் சேர்ந்த 15 வயதுள்ள இலங்கேஸ்வரன் என்பவர் விசாரணைக் குட்படுத்தப்பட்டபோது; நகைத்தொழிற்சாலையில் நிலத்துக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்த முழு நகைகளும் மீட்கப்பட்டது.

இது சம்பந்தமாக மற்றுமொருவரை பொலிஸார் தேடுகின்றனர். அவர் கைது செய்யப்படும் பட்சத்தில் திருடப்பட்ட 20,000 ரூபா ரொக்கப் பணமும் மீட்கப்படலாம் என்று பொலிசார் நம்புகின்றனர்.

# கிளான் ஆளுநர் சுட்டுக் கொலை!

தெஹ்ரான் ஜூலை 6

ஈரானிலுள்ள கிளான் மாகாணத்தின் ஆளுநர் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது இம்மாகாணத்தின் உதவி ஆளுநரும் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் இருவரே இவரை சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [வெ]

# 'சதாசிவம் கமிஷன் கலைக்கப்படமாட்டாது'

## முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, ஜூலை 6

"எரிசாராயப் புகார் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட சதாசிவம் கமிஷனை தமிழ்நாடு அரசு கலைக்காது. மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட வேறு கமிஷன், எரிசாராய ஊழல் குறித்து விசாரணைசெய்யும் அதே நேரத்தில் சதாசிவம் கமிஷனும் விசாரணைகளை மேற்கொள்ளும்."

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஆதி திராவிடர் சிலர் இஸ்லாமிய மதத்திற்கு மாறியுள்ளதற்கு தமிழ்நாடு அரசே காரணமென்று மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானா குற்றஞ்சாட்டியுள்ளார்.

"இவ்வித மத மாற்றம், எமது அரசாங்கம் பதவியேற்கும் முன்னரும் நடைபெற்றுள்ளது. யோகேந்திரா மக்வானாவின் இக்குற்றச்சாட்டு முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. உண்மைநிலை பற்றித் தெரிந்து கொள்ளாது அவர் தமிழ்நாடு அரசின் மீது குற்றஞ் சுமத்துவது அர்த்தமற்றதாகும்.

"இது குறித்துப் பிரதம மந்திரி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். ஒருசில ஆதித்திராவிடர் மதம் மாறிவருவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்றார்.

இதேவேளை எரி சாராயப் புகார் குறித்து விசாரணைசெய்யத் தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்ட சதாசிவம் கமிஷனைக் கலைக்கவேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் செய்தபோது கைதுசெய்யப்பட்ட தமிழ்நாடு இந்திரா இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. தங்கபாலுவும் மற்றும் தொண்டர்களும் இன்று விடுதலை செய்யப்பட்டனர். [வெ]

# பாலசோதி குடும்பத்துக்கு ரூ. 500 அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பாலசோதியின் குடும்பத்தினருக்கு அறவழிப்போராட்டக்குழு 500 ரூபா அன்பளிப்புச் செய்துள்ளது.

நல்லூர் எம். பி. யின் பணிமனையில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான பாலசோதியின் அந்தியேட்டிக்கிரியை வரணியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றபோது, அறவழிப்போராட்டக்குழு போஷகரும் சாவகச்சேரி எம். பி. யுமான திரு. வி. என். நவரத்தினமும், குழு ஸ்தாபகர் திரு. க. சச்சிதானந்தமும் இந்நிதியினை பாலசோதியின் குடும்பத்தினரிடம் கையளித்தனர்.

மேலும் ஒரு தொகைப்பணம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் அந்தியேட்டியில் தமிழர் கூட்டணித் தலைவர்களும் இயக்கப்பிரதிநிதிகளும் செல்வன் பாலசோதியின் சேவைகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர். [மா]

## தேர்ப்பவனி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன் கோவிலில் இன்று மாலை தேர் உற்சவம் நடைபெறவிருக்கிறது. நாளைக் காலை தீர்த்தோற்சவமும் 9-ந் திகதி பூங்காவனமும் நடைபெறவிருக்கிறது. அன்றிரவு நல்லூர் திருஞானசம்பந்தர் அதீன பரமாசாரிய சுவாமிகளின் அருளுரை இடம்பெறும். [து]

## துப்பாக்கி வெடித்து ஒருவர் பலி

[வவுனியா]

இரவல் கொடுத்த பத்திரிகையை வாங்கச் சென்றவர், தானாக வெடித்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இப்பரிதாபச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை, வவுனியாவைச் சேர்ந்த மடுக்கல்கந்தையில் நடைபெற்றது. மடுக்கல் கந்தை தொலைபேசித் தொடர்பு நிலையத்தின் இரவுக் காவலாளியான எச். ராஜகருண என்ற 28 வயது வாலிபருக்கே இச்சோக முடிவு ஏற்பட்டது.

அருகில் இருந்த டெவிவிஷன் தொடர்பு நிலையத்தில் இவரைப் போலவே இரவுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த ரிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தரிடம் இரவலாகக் கொடுத்திருந்த பத்திரிகையை வாங்கச் சென்றவர் அதனை வாங்கிக்கொண்டு திரும்பும்போது, கதவடியில் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி நழுவி, கீழே படிகளில் வீழ்ந்து திடீரென வெடித்ததால் இடதுகனத்தில் தலையை நோக்கிப் பாய்ந்த சன்னங்கள். மூளையைச் சிதறடித்துத் தலையோட்டையும் தாக்கிப் பிளந்

சதாம் பின்னேக்கிமல் லாக்காதரையில் வீழுந்த ராஜகருண இரத்த வெள்ளத்தில் மூழ்கி ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

இவரது மரணம் தொடர்பாக வவுனியா அரசினர் வைத்தியசாலையில், பதில் நீதவான் திரு. ஆர். வில்வராசா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது. இதில் ரிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களான எஸ். எம். கருணாரத்ன, சத்தியபாலன் ஆகியோரும், வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சோ. நிரஞ்சன், இறந்தவரின் வளர்ப்புத் தந்தையான சிறிமல்காமிகே நன்காமி 50], இறந்தவரின் சகோதரர் எஸ். நன்காமிகே ரஞ்சித் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜே. ராஜபக்ச சப்இன்ஸ்பெக்டர் சேனசில்வாவின் உதவியுடன் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

## ஜனாதிபதி ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### சர்வதேச கமிஷன்

"அப்படியானால் நீதி விசாரணை நடைபெறுவதை நீங்கள் விரும்பவில்லையா?" என்று ஒரு நிருபர் கேட்டார். இதற்கு திரு அமிர்தலிங்கம் பதிலளிக்கையில்; "நீதி விசாரணையை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கின்றோம். அப்படியான நீதி விசாரணையை ஒரு சர்வதேச விசாரணைக் கமிஷன் தான் நடத்தவேண்டும்" என்று கூறினார்.

### தனிமாநிலம் கோரிக்கை

"தமிழர்களுக்கு ஏன் தனிமாநிலம் கேட்கின்றீர்கள்?" என்று நிருபர் ஒருவர் கேட்டபோது;

"அப்படியானதொரு நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்" என்று அவர் விளக்கினார்.

இந்த நிலையில் ஒரு நிருபர்; "தனிமாநிலம் அதாவது பிரிவினை, உங்கள் கட்சியின் விஞ்ஞாபனத்தில் உண்டா?" என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த திரு. அமிர்தலிங்கம்; "தனிமாநிலத்தை அல்லது பிரிவினையை நாம் முன்னர் கோரவில்லை. தேவைப்படவும் இல்லை. ஆனால் இப்பொழுது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக தனிமாநிலம் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" என்று கூறினார்.

### புதன்கிழமை நாடு திரும்புவார்

திரு. அமிர்தலிங்கம் திருச்சி வழியாக தாயகம் புறப்பட்டுள்ளார். புதன்கிழமை கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆங்கிலம் கட்டாய பாடம்

[கொழும்பு]

க. பொ. த. [சாதாரண] பரீட்சைக்கு ஆங்கில மொழி கட்டாய பாடமாக இருக்கவேண்டும் என்று 13 பேர் அடங்கிய பல்கலைக்கழகக் குழு கல்வி அமைச்சுக்குச் சிபார்சு செய்துஅளது. [து]

## பொங்கல் விழா

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் கோணவளை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 03ம் இலக்கத்திலுள்ள கலாநிலய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka Regd No. QB 100286/81 P. O. Box 49, Jaffna. தந்தி: தொலைபேசி 7707